

தி.மு.க. இளைஞர் அணியின் மாநில துணைச் செயலாளர்களுடனான ஆலோசனைக் கூட்டம், நேற்று – கழக இளைஞர் அணிச் செயலாளர் – அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. இந்தக் கூட்டத்தில் இளைஞர் அணியின் ஒன்றிய–நகர – பகுதி – பேரூர் அளவிலான அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் நியமனத்துக்கான நேர்காணல் நிறைவுற்ற நிலையில், புதிய நிர்வாகிகள் அறிவிப்பு குறித்து துணைச்செயலாளர்களுடன் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் கலந்தாலோசித்தார். சேலத்தில் நடைபெறவுள்ள இளைஞரணி யின் 2–ஆவது மாநில மாநாட்டுக்கான குழுக்கள் தலைமைக் கழகத்தால் அமைக்கப்பட்டதைத் தொடர்ந்து, மாநாட்டு பணிகளை முன்னெடுப்பது பற்றியும் ஆலோசித்தார். தமிழ்நாட்டின் கல்வி உரிமையை நிலைநாட்டிட கழகம் தொடங்கி யுள்ள ‘நீட் விலக்கு நம் இலக்கு’ கையெழுத்து இயக்கத்தை இன்னும் வேகமாக முன்னெடுத்து banneet.in இணையதளம் மற்றும் அஞ்சல் அட்டைகளில் அதிகளவில் கையெழுத்துகளைப் பெற அறிவுறுத்தினார்.

### சி.கே.வி. தமிழ்செல்வன் தலைமையில் நீட் தேர்வு விலக்குக் கோரி

# காஞ்சிபுரம் மாநகரில் 51 வார்டுகளில் 102 இடங்களில் கையெழுத்து இயக்கம்!

## மாவட்டச் செயலாளர் க.சுந்தர் எம்.எல்.ஏ. தொடங்கி வைக்கிறார்!

காஞ்சிபுரம், நவ. 8 -

காஞ்சிபுரம் தெற்கு மாவட்டம், காஞ்சிபுரம் மாநகரில் நீட் தேர்வு விலக்கு அளிக்கக் கோரி மாநகரில் 51 வார்டுகளில் 102 இடங்களில் கையெழுத்து இயக்கம் நடைபெறுகிறது. இதனை மாவட்டக் கழகச் செயலாளர் க.சுந்தர் எம்.எல்.ஏ. தொடங்கி வைக்கிறார். இது குறித்து மாநகரச் செயலாளர் சி.கே.வி.தமிழ்செல்வன் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

நீட் தேர்வுக்கு விலக்கு அளிக்ககோரி 50 நாட்களில் 50 இலட்சம் மக்களிடம் கையெழுத்து பெறும் மாபெரும் நிகழ்ச்சியை காஞ்சிபுரம் மாநகர கழகம், பகுதி கழகங்கள், மாநகர இளைஞர் அணி, மாணவர் அணி, மருத்துவ அணி மற்றும் இதர அணிகள் இணைந்து மாநகர கழகத்தின் 51 வார்டுகளில் வரும் 10.11.2023 வெள்ளிக்கிழமை அன்று காலை 8.00 மணி முதல் இரவு 8.00 மணி வரை 102 இடங்களில் “நீட் விலக்கு நம் இலக்கு” கையெழுத்து இயக்கம் நடைபெறுகிறது.

நிகழ்ச்சிக்கு தலைமை ஏற்று நடத்துபவர்கள் மற்றும் வார்டு தலைமை வகிப்பவர் வருமாறு: -

1வது வட்டம், பி.எஸ். சாகுல் ஹமிது (வட்டக் கழகப் பொறுப்பாளர்), 1 வது வார்டு, பி.சிவக்குமார் (பகுதிப் பிரதிநிதி), 2 வது வார்டு முனைவர் க.செல்வம் (வட்டச் செயலாளர்), பி.எஸ்.குடியரசு (பகுதி துணைச் செயலாளர்), 3வது வார்டு டி.ஜெய்கணேஷ் (வட்டச் செயலாளர்), 4 வது வார்டு வி.பகவான் (பகுதிப் பிரதிநிதி), எஸ். செந்தில் (வட்டப் பொறுப்பாளர்), பி.நிர்மலா (மாநகர துணைச் செயலாளர்), 5 வது வார்டு எஸ்.சிகாமணி (பொதுக்குழு உறுப்பினர்), ஏ.எஸ். முத்துச்செல்வம் (மாநகர துணைச் செயலாளர்), 6-வது வார்டு கே.சண்முகம் (வட்டப் பொறுப்பாளர்), பி.சுகுமார் (மாநகர இளைஞர் அணி அமைப்பாளர்), 7 வது வார்டு எஸ்.வரதன் (வட்டச் செயலாளர்), வினோத்குமார் (பகுதி துணைச் செயலாளர்), 8 வது வார்டு இ.சந்தானம் (வட்டச் செயலாளர்), பா.தனலட்சுமி (பகுதி துணைச் செயலாளர்), முரசொலி சீனிவாசன் (வட்டப் பிரதிநிதி), 9 வது வார்டு பி.பார்த்திபன் (வட்டச் செயலாளர்), அ.யுவராஜ் (மாவட்ட இளைஞரணி அமைப்பாளர்), ஜி.குமரேசன் பகுதி அவைத் தலைவர், 10- வது வார்டு ஏ.எஸ்.இரவி (வட்டச் செயலாளர்), எம்.மகாதேவன் ( பகுதிக் கழகப் பொறுப்பாளர்), 16- வது வார்டு கே.எஸ். வேல்முருகன் ( வட்டச் செயலாளர்), எம்.கே.நந்தா (மாநகர இளைஞரணி துணை அமைப்பாளர்), 17 வது வார்டு இ. இளங்கோவன் (வட்டக் கழகப் பொறுப்பாளர்), டி.ஜெய்கணேஷ் ( மாவட்ட தொண்டர் அணி அமைப்பாளர்), 18 வது வார்டு கே.சம்பத் (வட்டக் கழகச் செயலாளர்) உள்பட 51 வார்டுளில் 102 இட ங்களில் மாபெரும் கையெழுத்து இயக்கம் நடைபெறகிறது.

இந்நிகழ்ச்சியில் மாநகர கழகத்திற்கு உட்பட்ட அனைத்து கழகத்தினர் பங்கேற்று மாபெரும் அளவில் இந்நிகழ்ச்சியினை நடத்தி தருமாறு தங்களை கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு மாநகரச் செயலாளர் சி.கே.வி. தமிழ் செல்வன் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

### மறைந்த கும்மிடிப்பூண்டி கி.வேணுவுக்கு புகழ் வணக்கக் கூட்டம் :

# திருவுருவப் படத்தை பொதுச்செயலாளர் துரைமுருகன் திறந்து வைத்து புகழுரை ஆற்றுகிறார்!

## கழகப் பொருளாளர் டி.ஆர்.பாலு எம்.பி. - முன்னணியினர் பங்கேற்பு!

திருவள்ளூர், நவ. 08-

திருவள்ளூர் முன்னாள் மாவட்ட கழக செயலாளரும் கும்மிடிப்பூண்டி சட்டமன்ற முன்னாள் உறுப்பினரும் கழக உயர்நிலை செயல் திட்ட குழு உறுப்பினருமான கும்மிடிப்பூண்டி கி.வேணு அண்மையில் இயற்கை எய்தினார்.



அவரது திருவுருவப் படத்திறப்பு மற்றும் புகழ் வணக்க கூட்டம் இன்று (08. 11.2023 புதன்கிழமை) 4 மணி அளவில் கவரைப்பேட்டையில் உள்ள எம்.வி.பேரடைஸ் மண்டபத்தில் நடைபெறுகிறது. இதில் மாவட்ட கழக செயலாளர் டி.ஜே. கோவிந்த ராஜன் எம்.எல்.ஏ தலைமை வகிக்கிறார் கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி முன்னிலை வகிக்கிறார்

கழக பொதுச்செயலாளர் அமைச்சர் துரைமுருகன் கலந்துகொண்டு கவரைப்பேட்டை பனப்பாக்கம் கிராமத்தில் உள்ள இல்லத்தில் திருவுருவப்படத்தை திறந்து வைத்து புகழ் வணக்கக் கூடத்தில் பங்கேற்று புகழுரையாற்றுகிறார்.

இதில் கழக பொருளாளர் டி.ஆர்.பாலு எம்.பி., முன்னாள் ஒன்றிய இணை அமைச்சர் எஸ்.ஜெகத்ரட்சகன் எம்.பி., தமிழ்நாடு கைத்தறி துணியின் நூல் அமைச்சர் ராணிப்பேட்டை ஆர்.காந்தி, முன்னாள் பால்வளத்துறை அமைச்சரும் திருவள்ளூர் மத்திய மாவட்ட கழக செயலாளர் ஆவடி சா.மு.நாசர் எம்.எல்.ஏ. உள்ளிட்ட ஒன்றிய, மாநில முன்னாள் இந்நாள் அமைச்சர் பெருமக்கள் நாடாளுமன்ற உறுப்பினர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள், மாவட்ட கழக செயலாளர்கள், மாநில மாவட்ட கழக நிர்வாகிகள், ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள், கழக நிர்வாகிகள், சார்பு அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள், கழக மூத்த முன்னோடிகள் அனைவரும் கலந்து கொள்கிறார்கள்.

திருவள்ளூர் மாவட்ட ஊராட்சி குழு பெருந்தலைவர் கே.வி.ஜி.உமா மகேஸ்வரி, கும்மிடிப்பூ ண்டி தெற்கு ஒன்றிய கழக செயலாளர் கும்மிடிப்பூ ண்டி கி.வே.ஆனந்த குமார் ஆகியோர் நன்றி கூறுகிறார்கள்.

### ப.தாயகம் கவி எம்.எல்.ஏ. ஏற்பாட்டில்

# கழக நிர்வாகிகள் - பாக உறுப்பினர்களுக்கு பரிசு!

## அமைச்சர் பி.கே.சேகர்பாபு வழங்குகிறார்!

சென்னை,நவ.8-

சென்னை கிழக்கு மாவட்டம் திரு.வி.க.நகர் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் கழக துணை அமைப்பு செயலாளர் வழக்கறிஞர் ப.தாயகம் கவி ஏற்பாட்டில் திரு.வி.க. நகர் சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட வடக்கு மற்றும் தெற்கு பகுதியில் உள்ள பகுதி கழக செயலாளர்கள் மற்றும் நிர்வாகிகள், வட்ட கழக செயலாளர்கள் மற்றும் வட்ட கழக நிர்வாகிகள், மாவட்ட பிரதிநிதிகள், அனைத்து அணிகளின் அமைப்பாளர்கள் மற்றும்துணை அமைப்பாளர்கள், சார்பு மன்ற நிர்வாகிகள், பாகத் தலைவர்கள் மற்றும் பாக முகவர்கள் உள்ளிட்டவர்களுக்கு நாளை (9.11.2023) அன்று காலை 10 மணிக்கு டாக்டர் அம்பேத்கர் கல்லூரி சாலையில் புளியந்தோப்பு காவல்நிலையம் அருகில் அமைந்துள்ள திரு. வி.க.நகர் சட்டமன்ற உறுப்பினர் அலுவலகத்தில் சென்னை கிழக்கு மாவட்ட கழக செயலாளர் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு தீப ஒளி திருநாள் பரிசாக பட்டாசு மற்றும் இனிப்புகளை வழங்குகிறார்.

மேலும் இந்நிகழ்வில் சென்னை மாநகர மேயர் பிரியாராஜன், நாடாளுமன்ற உறுப்பினர் கலாநிதி வீராசாமி, பகுதிகழக செயலாளர்கள் செ.தமிழ்வேந்தன் , எம். சாமிக்கண்ணு, ஆசாத், புனிதவதி எத்திராஜ், டி.லோகேஷ், வழக்கறிஞர் துலுக்காணம், லயன் உதயசங்கர்,பெரோஸ் கான், பெரம்பூர்மகேஷ், ராஜ் முகமது, வழக்கறிஞர் எம்.சரவணன், அம்பேத்வளவன், ரமணிலோகேஷ், தமிழ்செல்விசசிகுமார்,

வட்ட கழக செயலாளர்கள் மா.ருத்ரமூர்த்தி,பரிமளா சுரேஷ், எம்.ஏ. டீக்கா, எம். இஸட். அபாய், எம்.தமீம் பாய், பொல்லு டி. சுரேஷ்குமார், எஸ். புஷ்பராஜ், வழக்கறிஞர் கிருஷ்ணகுமார், சன்.டிவி வெங்கடேசன், எஸ். சசிகுமார், எஸ்.வெங்கடேசன்,

வடக்கு பகுதிகழக நிர்வாகிகள் தில்லை கதிரவன் பெரம்பூர் ஆர். ராஜன் புல்லட் கி. ரமேஷ், புவனவதி, கிணார் ஆறுமுகம்,

தெற்கு பகுதி கழக நிர்வாகிகள் கோவிந்தன் , த.கருணாநிதி, சுகுமார்,வனஜா சண்முகம், அ.கருணாநிதி, மாவட்ட பிரதிநிதிகள்,விஜயகுமார், ஸ்வீட் பாபு ,மதுரை, பிரகாசம், சீனிவாசன், அண்ணா துரை, எம். துரைசாமி ,ஜெகநாதன் ,பாபு மனோகர், பி.சதீஷ், ராஜி, இளஞ்செழியன், நாமதேவன், ராஜராஜன், புருஷோத்தமன், சுப்பிரமணி, தாமரைச் செல்வன், கதிரவன், நாகலிங்கம், நெல்லை மா.முத்தையா, எச். திவாகர், உள்ளிட்ட கழக நிர்வாகிகள், தொகுதியில் அனைத்து பாகமுகவர்கள் நிகழ்ச்சியில் கலந்து கொள்கின்றனர்.




மதுரவாயல் சட்டமன்ற உறுப்பினர் அலுவலகம் அருகில், மதுரவாயல் தெற்கு பகுதி இளைஞர் அணி, சார்பில், நீட் விலக்கு நம் இலக்கு மாபெரும் கையெழுத்து இயக்கத்தை, மதுரவாயல் தொகுதி சட்டமன்ற உறுப்பினர், மதுரவாயல் தெற்கு பகுதி செயலாளர் காரம்பாக்கம் க.கணபதி தலைமையில் மதுரவாயல் தெற்கு பகுதி முழுவதும், நீட் விலக்கு கையெழுத்து இயக்கம் தொடங்கபட்டது, இந்நிகழ்ச்சியில் பகுதி துணை செயலாளர் வே. மதியழகன், வழக்கறிஞர் எஸ்.பாலமுருகன்,மாவட்டத் துணை அமைப்பாளர் செ.ரவி, வட்ட செயலாளர் சி.சுந்தர், மாவட்ட பிரதிநிதி க.கைலாசம், மதுரவாயல் தெற்கு பகுதி இளைஞர் அணி நிர்வாகிகள், வட்ட நிர்வாகிகள்,அனைத்து அணிகளின் அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள், கலந்து கொண்டனர்.






முன்னாள் திருவள்ளூர் மாவட்ட கழகச் செயலாளர்
முன்னாள் கழக உயர்நிலை செயல் திட்டக்குழு உறுப்பினர்

**கும்முடிப்பூண்டி கி.வேணு** Ex. MLA.,
**படத்திறப்பு நிகழ்ச்சி**

நாள் : 8.11.2023 புதன்கிழமை – இடம் : பன்பாக்கம்

கும்முடிப்பூண்டி என்றாலே வேணுதான் என்று
சொல்லுமளவுக்கு கழகப் பணியாற்றி,
தொகுதி மக்களிடம் மட்டுமல்ல,
திருவள்ளூர் மாவட்ட மக்களிடமும் அன்பு காட்டி நற்பெயர் பெற்றவர்
**என் அன்பு கண்மணி** கும்முடிப்பூண்டி கி.வேணு
– முத்தமிழறிஞர் **கலைஞர்**

எத்தகைய இடர்வரினும் எதிர்த்து நிற்கும்
அஞ்சாத நெஞ்சுக்குச் சொந்தக்காரர்.
**மிசா** சிறை வாசத்தில் என்னுடனும்,
கருப்புக் கொடி காட்டும்போராட்டத்தில் ஈடுபட்டு
முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களோடும்
சிறையில் இருந்த கழகப் போராளி
– தலைவர் **மு.க.ஸ்டாலின்**

வணக்கத்துடன் நன்றிமறவா
**ஆ.கிருஷ்ணசாமி** MLA (Ex.MP)
கழக ஆதிதிராவிடர் நலக்குழுச் செயலாளர்
பூவிருந்தவல்லி சட்டமன்ற உறுப்பினர்